உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 20.06.2026 • மலர் 04 • இதழ்: 172 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 20.06.2026 • Vol : 04 • Issue : 172 • Page : 4 • Rs. 5/-

### சர்வதேச யோகா தினம்:

# ஒரே நேரத்தில் பிரம்மாண்டமான யோகா நிகழ்ச்சி

## பிரதமர் மோடியுடன் பலர் பங்கேற்பு



புதுடெல்லி, ஜூன் 21 12வது சர்வதேச யோகா தினம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு ஆரோக்கியமான முதுமைக்கு யோகா' என்ற கருப்பொருளில் விழா கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் யோகா சங்கம் சார்பாக பிரதமர் மோடியுடன் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் யோகா நிகழ்த்த திட்டமிடப்பட்டு உள்ளது.

இதில் பங்கேற்பதற்காக பல்வேறு இடங்களில் பங்கேற்பாளர்கள் திரட்டப்பட்டு வருகின்றனர். இதற்காக அமைப்புகள், நிறுவனங்கள் yoga.ayush.gov. ர் in yoga sangam என்ற இணையதளத்தில் தங்களது யோகா சங்கம் நிகழ்வுகளை பதிவு செய்யுமாறு ஆயுஷ் அமைச்சகம்' அழைப்பு விடுத்திருந்தது.

இதையொட்டி இணைய தளத்தில் பதிவுகள் அதிகரித்து உள்ளன. நாடு முழுவதிலும் இருந்து பள்ளிகள், கல்லூரிகள், அரசு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள்,தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்கள், பிரதமர் தலைமையிலான யோகா கொண்டாட்டத்தில் பங்கேற்க ஆர்வத்துடன் பதிவு செய்து வருகின்றன.

இந்தியா முழுவதும் 778 மாவட்டங்களை உள்ளடக்கி, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் பல்வேறு அமைப்புகள் பதிவு செய்துள்ளன. இந்த பதிவுகளில், 3.22 லட்சத்திற்கும் மேற்பட்ட 2 அரசு நிறுவனங்கள், 2 லட்சம் கல்வி நிறுவனங்கள், 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற பிரிவுகளைச் சேர்ந்த சுமார்44ஆயிரம்அமைப்புகள் பங்கேற்றுள்ளன.

மேற்கு வங்காளத்தில் இருந்து அதிகபட்சமாக 2.76 லட்சத்திற்கும் அதிகமானஅமைப்பு, நிறுவனங்கள் பதிவு செய்து முதலிடத்தில் உள்ளது. ராஜஸ்தான் 1.50 லட்சம் பதிவுகளுடன் 2ம் இடத்தில் உள்ளது. மராட்டியம், ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், அசாம், உத்தர பிரதேசம், தமிழ் நாடு, ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை இந்த இணையதளத்தில் அதிகபட்சமாக செய்துள்ளன.

## மாற்றுத்திறனாளிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சி



திருப்பூர் ஜூன் 20,

புதிதாக பதிவு செய்துள்ள திருப்பூர் மாற்றுத்திறனாளிகள்நல முன்னேற்ற சங்க பணிகள் சிறக்க அமைச்சர் வாழ்த்து திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் நாரணவரே மனீஷ் சங்கர் ராவ் அவர்களுடன், மாவட்ட பொறுப்பு அமைச்சர் (ம) மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருன்ராஜ், அவர்களை திருப்பூர் மாற்றுத்திறனாளிகள்நலமுன்னேற்றசங்கதலைவர்ஈ.பி.அ.சரவணன், நிர்வாகிகள் கணபதி, பாலகுமார்,பனியன் சிட்டி கன்ஸ்யூமர் வெல்பேர் அசோசியசன் தலைவர் கே.ஏ.கே.கிருஷ்ணசாமி, ரவி சந்தித்தனர்.

அமைச்சரிடம் திருப்பூர் மாற்றுத்திறனாளிகள் நல முன்னேற்ற சங்கத்தினர் அளித்துள்ள மனுவில்...

திருப்பூரில் வெள்ளிதோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வந்த மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம் தற்போது திடீரென திருப்பூர் தாராபுரம் சாலையிலுள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியாகியாக மாற்றுத்திறனாளிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதால் வழக்கபோல் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே தொடர்ச்சியாக முகாம் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டம் வாரியாக வீட்டுமனைப் பட்டா கோரி மாற்றுத்திறனாளிகள் அளித்துள்ள மனுக்களையும் ( 162 ) மாற்றுத்திறனாளிகளின் விபர பட்டியலையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா விரைவாக வழங்க வேண்டும்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தில் நடைபெற்ற குளறுபடிகள், பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாக நடைபெற்ற விசாகா கமிட்டி விசாரணை ஒருதலைபட்சமாக நடத்தி தவறுகள் செய்த டி டி ஆர் ஓ,, ஜெ ஆர் ஓ மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளாமல் புகாரளித்த பாதிக்கப்பட்ட பெண் பணியாளரை பணிநீக்கம் செய்து பெண் பணியாளர் விரோதமாக போக்கில் செயல்பட்டு தமிழக அரசிற்கு அவப்பெயரை தொடர்ச்சியாக ஏற்படுத்தியுள்ளதால் இது விசாரிக்க ஐ ஏ எஸ் அலுவலரை நியமித்து மீண்டும் முழுமையாக விசாரணை நடத்தி பெண் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். உள்ளிட்ட கோரிக்கை மனுக்களை அளித்தபோது அனைத்தையும் விரைவாக தீர்வுகாணப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### தேவலாபுரம் சுயம்பு ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மன்

## சிரசு 96 ம் ஆண்டு பெருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



ஆம்பூர், ஜூன்:21,

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் பாலாற்றங்கரையில் எழுந்தருளிஅருள்பாலித்து வரும் அருள்மிகு சுயம்பு ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மன் கோயில் மாவட்டத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்ற சிரசு திருவிழா 96ம் ஆண்டு முன்னிட்டு வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஒரு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

முன்னதாக கடந்த 15 நாட்களுக்கு முன்பு அம்மனுக்கு காப்பு கட்டி பக்தர்கள் விரதம் இருந்து வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 3 நாட்களாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம அலங்காரம் நடைபெற்றது. கூழ் அமுது படைத்தல், மாவிளக்கு படைத்தல் மற்றும் ஏராளமான பெண்கள் அம்மனுக்கு பொங்கல் வைத்து படையல் செய்து வணங்கினார்கள். புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்குமேல் புதிய ஸ்ரீ சுயம்பு திருப்பதி கெங்கை அம்மன் ஆலயத்தில் இருந்து சீர்வரிசை மேளதாளங்களுடன் மாரியம்மன் கோவிலுக்கு எடுத்துச் சென்று அங்கு சிரசு அம்மனுக்கு அலங்காரம் ஆராதனை செய்து அதிகாலை முதல் திருவீதி உலா வந்தது வியாழன் பிற்பகல் 3 மணிக்கு சுயம்பு ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மன் ஆலயத்திற்கு சிரசு அம்மன் வருகை தந்து ஆலயத்தில் பக்தர்களுக்குஅருள்பாலித்தார்கள்.

தமிழ் கலாச்சாரம் போற்றும் வகையில் அருள்மிகு சுயம்பு ஸ்ரீ திருப்பதி கெங்கை அம்மன் திருவிழாவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், நையாண்டி மேளம், கரகாட்டம், சிலம்பு ஆட்டம் உள்ளிட்டா பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. வியாழன் இரவு திருப்பத்தூர் மாவட்டம் போற்றும் வகையில் வண்ண வண்ண வான வேடிக்கை, விண்ணை முட்டும் வெடிகள் வர்ண ஜாலங்களுடன் வானவேடிக்கை மிகசிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

அருள்மிகு கெங்கை அம்மன் சிரசு திருவீதி உலா முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து வீடு வீடாக பக்தர்களுக்கு அருள்பாலித்தார்கள்.

வீடுகள் தோறும் அம்மனுக்கு சிறப்பு ஆராதனை வழிபாடு நடைபெற்றது. திருவிழாவை காண தேவலாபுரம், ராமச்சந்திராபுரம், காமராஜபுரம், கம்மகிருஷ்ணம் பள்ளி, வெங்கடசமுத்திரம், மிட்டாளம், வீராங்குப்பம், குமாரமங்கலம், கரும்பூர், கோவிந்தாபுரம், துத்திப்பட்டு,

கைலாச கிரி, ஆம்பூர், குடியாத்தம், வாணியம்பாடி, வேலூர், திருப்பத்தூர், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து திருவிழாவை கண்டு ரசித்தனர். நிகழ்ச்சியில் ஊர் நிர்வாகத்தர் மற்றும் பொதுமக்கள் இளைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



### குமரியில்

## போலீசார்,தூய்மை பணியாளர்கள், மாணவர்கள் யோகா பயிற்சி

நாகர்கோவில், ஜூன். 21

சர்வதேச யோகா தினம் ஆண்டு வரும் ஜூன் 21ஆம் தேதி (இன்று) கடைக்கு பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இன்று ஞாயிற்றுக்கிழமை அரசு விடுமுறை என்பதால் குமரி மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் அரசு துறைகளில் நேற்று சனிக்கிழமை யோகா தினம் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில் போலீசார், தூய்மை பணியாளர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு யோகாசனங்களை செய்தனர்.

நாகர்கோவில் ஆயுதப்படை மைதானத்தில் நேற்று காலை காவலர்களுக்கான சிறப்பு யோகா பயிற்சி நடைபெற்றது. மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். துணை சூப்பரண்டுகள், இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பெண் போலீசார் உட்பட

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உடல், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சூரிய நமஸ்காரம், வஜ்ராசனம் உள்ளிட்ட பல்வேறு ஆசனங்களை அவர்கள் செய்தனர். பணிச்சுமையால் ஏற்படும் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் இந்த சிறப்பு யோகாசன பயிற்சி அமைந்திருந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கான யோகாசன நிகழ்சி வடசேரியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மேயர் பிரின்சி லதா, நகர் நல அலுவலர் டாக்டர் சரோஜினி தேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தினமும் கடின உழைப்பில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள் உடலை தளர்த்தவும், சுவாசத்தை சீராக்க உதவும் மூச்சுப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு யோகா பயிற்சிகளை மேற்கொண்டனர்.

மேலும் நாகர்கோவில் நகரில் உள்ள தனியார் பள்ளிகளில் யோகாசன தின நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. மாணவ மாணவிகள் வெள்ளை நிற சீருடை அணிந்து மைதானங்களில் வரிசையாக அமைந்து யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டனர். இது போன்று குமரி மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு சமூக அமைப்புகள் சார்பிலும் யோகா தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## தஞ்சாவூர் அன்னை சத்யா விளை யாட்டு அரங்கில் வளர்ச்சி பணிகள்: கலெக்டர் ரேவதி நேரில் ஆய்வு



தஞ்சாவூர் ஜூன் 21

தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி சாலையில் உள்ள அன்னை சத்யா விளையாட்டு அரங்கில்பல்வேறுவளர்ச்சி திட்டம் பணிகளை கலெக்டர் ரேவதி நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்

நீச்சல் குளம், ஆக்கி விளையாட்டு மைதானம், ஸ்கேட்டிங் ரிங், கூடைப் பந்து ஆடுகளம், இறகு பந்து ஆடுகளம், பல்நோக்கு விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம், நவீன உடற் பயிற்சி கூடம், டென்னி ஸ் ஆடுகளம், பளுதூக்குதல், கூடம் திறந்த வெளி குத்துச்சண்டை வளையம் மற்றும் பல்வேறு விளை யாட்டு உட்கட்டமைப்புகளை மேம்ப டுத்துவதற்கு மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்க.

மேலும் நிலுவை யில் உள்ள பராமரிப்பு பணிகளை விரைவாக வும், தரமாகவும், முடித்து தரும்படி சம்பந்தப்பட்ட அலுவ லர்களுக்கு உத்தரவிட்டார் ஆய்வின்போது மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் செந்தில்குமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்



தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணியை நேரில் சந்தித்து வருகின்ற சட்ட மன்ற கூட்டத்தில் தமிழ்நாட்டில் சேவை பெறும் உரிமை சட்டத்தை இயற்ற வலியுறுத்தக்கோரி சட்டத்தூண்கள் அறக்கட்டளை நிறுவனர்/தலைவர் குணசேகரன் நேரில் மனு கொடுத்தார். இந்த நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேஸ்வரன், சட்டதூண்கள் அறக்கட்டளை பொருளாளர் காவேரி, மாநில தொழில்நுட்ப செயலாளர் கௌதம், மாவட்ட தலைவர் P. k. சிவா, மாவட்ட செயலாளர் நாகராஜ், மாவட்ட இளைஞரணி செயலாளர் கணேஷ், மாவட்ட விவசாய அணி செயலாளர் முனிராஜ், தருமபுரி ஒன்றிய செயலாளர் முரளி உட்பட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில், 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடைபெறவுள்ளதையடுத்து அரங்குகள் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் . பா.முகுந்தன் கிருஷ்ணகிரி .ந.இளையராஜா ஊத்தங்கரை, .இ.சி.கோவிந்தராஜன் பர்கூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ஜி.எஸ்.அனிதா, ஆகியோர் முன்னிலையில் பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர். உடன் இணை இயக்குநர் வேளாண்மை .க.உமா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் வேளாண்மை .ஆஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தி பிறந்த நாளை ஒட்டி கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதன்பிறகு கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடந்தது தெற்கு மாவட்ட தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம் எல் ஏ ஆர் எம் பழனிச்சாமி முன்னாள் மாவட்ட தலைவர் மக்கள் ராஜன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# காரிமங்கலத்தில் 12 வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது

தருமபுரி ஜூன் 21

தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் 12 வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு காரிமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் யோகா தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். அனுராதா தலைமையில்,பள்ளிதலைமைஆசிரியர் (பொறுப்பு) N.சங்கர் முன்னிலையில் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் டாக்டர் A.R. சுமதி, டாக்டர் தாரணி ஆகியோர் மாணவிகளுக்கு யோகாசன பயிற்சி, மூச்சுப் பயிற்சி, இயற்கை வாழ்வியல் மருத்துவ முறைகள் குறித்து மாணவிகளிடம் எடுத்து உரைத்தனர். மேலும் நிகழ்ச்சியின் முதலில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணி பள்ளியில் துவங்கி ராமசாமி கோயில் வழியாகச் சென்று மீண்டும் பள்ளியை வந்து அடைந்தது. பள்ளி மாணவிகள் எதிர்கொள்ளும் உடல்நல அசவுரியங்கள் , கவனச் சிதறல்கள், ஒழுக்கம், தற்பாதுகாப்பு முதலியவை யோகா மற்றும் இயற்கை மருத்துவர்களால் தெளிவாக விளக்கப்பட்டது'. இதில் பள்ளியின் மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் கலை, தனம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



பொள்ளாச்சி பாலக்காடு சாலையில அமைந்துள்ள கேசவ் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் யோகா தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்கள் யோகா விழிப்புணர்வு மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாணவர்கள் நகராட்சி அலுவலகத்தில் இருந்து தொடங்கி விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்து வந்தனர் இந்த பேரணி காந்தி சிலை அருகே முடிவடைந்தது இதில் பள்ளியின் தாளாளர் ஆர் வி எஸ் மாரிமுத்து மற்றும் செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் முதல்வர் பிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்

# காதுகேளாதோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டுப் புத்தகங்களை வழங்கினார்



திருப்பூர் ஜூன்: 21

இந்தியாவின் எதிர்காலம் நாட்டின் வருங்கால தலைமுறையின் பாதுகாவலன் வருங்கால பாரதத்தின் பிரதமர் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பி.கோபால்சாமி அவர்களின் அறிவுறுத்தல் படி 43வது வார்டு காங்கிரஸ் தலைவி எஸ்.பிரேமலதா B.com தலைமையில் சாதிக் பாட்சா அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காதுகேளாதோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டுப் புத்தகங்களை வழங்கினார்.நிகழ்ச்சியில் மாநகர வர்த்தக அணி தலைவர் சேக்தாவுத் மற்றும் அம்ஜத் கான்.நாச்சிமுத்து.அபுதாகீர்பிரியா,மற்றும்நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..



ஈரோடு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலராக பணியாற்றி வந்த சுகுமார்.திருப்பூர் மாவட்டத்திற்கு மாறுதல் ஆகி உள்ளார். இவருக்கு பதில் மகேஸ்வரன் புதிய செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

## பாலக்கோடு அருகே

# கள்ள நோட்டு மாற்ற முயன்ற தவெக பிரமுகர் கைது: ரூ.9,500 பறிமுதல் செய்த காவல்துறையினர்



தருமபுரி ஜூன் 21

தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி அடுத்த பிக்கல்நாயக்கனஅள்ளி கிராமத்தை சேர்ந்த அங்கமுத்து வயது (35) தவெக பிரமுகரான இவர் பாத்திர வியாபாரம் செய்து வருகிறார். மாரண்டஅள்ளியில் உள்ள ஹோண்டா ஷோரூமில் புதியதாக இரு சக்கர வாகனம் எடுக்க ரூ. 31,000 முன் தொகையாக செலுத்தினார். அவர் கொடுத்த பணத்தை எண்ணும் பொழுது 19 ஐநூறு நோட்டுகள் ( ரூ. 9,500) போலீ கள்ள நோட்டுக்கள் என தெரிய வந்தது,

உடனடியாகஷோரூம்மேலாளர்ரஞ்சித்மாரண்டஅள்ளி காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த மாரண்டஅள்ளி இன்ஸ்பெக்டர் முருகன் மற்றும் காவல்துறையினர் ரூபாய் நோட்டுக்களை சோதனை செய்ததில் 19 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும் கள்ள நோட்டுக்கள் என தெரிய வந்தது, அதனை தொடர்ந்து கள்ள நோட்டுக்களை பறிமுதல் செய்த காவல்துறையினர் அங்கமுத்துவை கைது செய்து தருமபுரி சிறையில் அடைத்தனர்.

## கருங்கல் அருகே

# இருசக்கர வாகனத்தில் வெடிபொருட்கள் கடத்திய கல்லூரி மாணவர் கைது

மார்த்தாண்டம், ஜூன். 21

கருங்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர் முகமது தாரிக் அல் அமீன் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் தெருவுகடை சந்திப்பு பகுதியில் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். வாகனத்தை ஓட்டி வந்தவர் தக்கலை அருகே உள்ள மருதூர்குறிச்சி பகுதி சேர்ந்த 17 வயது கேட்டரிங் கல்லூரி மாணவர் என்பது தெரிய வந்தது. உடனடியாக அவரது வாகனத்தை போலீசார் சோதனை செய்தபோது, அதில் எவ்வித அனுமதி இன்றி பேராபத்தை விளைவிக்க கூடிய வெடி பொருட்கள் மறைத்து கொண்டு சென்றது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரிடம் 24 எலக்ட்ரிக்கல் டெட்டனேட்டர்கள், 3 சாதாரண டெட்டனேட்டர்கள் மற்றும் 50 ரெக்ஸ், 90 ஜெல் வெடிமருந்து குச்சிகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டது. போலீசார் நடத்திய அதிரடி விசாரணையில் புதுக்கடை அருகே கீழ்குளம் பகுதியில் உள்ள ஒரு கல்குவாரியில் இருந்து கிணறு வெட்டுவத ற்காகவும், அதில் உள்ள பாறையை உடைப்பதற்கும் பயன்படுத்துவதற்காக இந்த வெடிபொருள்களை கொண்டு செல்வதாக கூறியுள்ளார். இதை எடுத்து சிறுவனை போலீஸ் நிலையம் அழைத்துச் சென்று போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். மேலும் இந்த சம்பவம் குறித்து கருங்கல் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த சம்பவத்தில் மேலும் 2 பேருக்கு தொடர்பு உள்ளது தெரியவந்துள்ளது. அவர்களை போலீசார் தேடுவது அறிந்தவுடன் தலைமறைவாகி விட்டதாக கூறப்படுகிறது.



# பழமை வாய்ந்த அருள் தரும் ஸ்ரீ இராஜகாளியம்மன் திருநெறிய தெய்வத் தமிழ் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

கோவை ஜூன்:21

கோவை நல்லாம்பாளையம் மாசாணியம்மன் கார்டன் பகுதியில் அமைந்துள்ள அருள்தரும் ஸ்ரீ இராஜகாளியம்மன் திருக்கோவிலில் திருநெறிய தெய்வத்தமிழ் திருக்குட நன்னீராட்டு பெருவிழா விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவானது கடந்த திங்கட்கிழமையன்று முளைப்பாரி,தீர்த்த குடம் மற்றும் ஊர் பெரியோர்கள் அழைத்தல்,மங்கள இசை, திருவிளக்கு ஏற்றுதல்,புனித நீர் வழிபாடு என பல்வேறு பூஜைகள் நடைப்பெற்றது. செவ்வாய்க்கிழமை விநாயகர் வழிபாடு,கலா தரிசனம்,கும்ப அலங்காரம், இளங்கோவில் தெய்வங்கள் மற்றும் இராஜகாளியம்மன் திருக்கவசங்களில் எழுந்தருள செய்தல், யாக சாலை வாயிற்காவலர்,108 வகை மூலிகை ஆகுதி,நிறை ஆகுதி, பேரொளி வழிபாடு,மலர் அர்ச்சனை, திருமுறை விண்ணப்பம் என ஏராளமான பூஜைகள் புதன்கிழமை அன்று திருப்பள்ளி எழுச்சி, மங்கல இசை, கருத்தினால் திருமஞ்சனம் பாவன அபிஷேகம்,தீர்த்த குடம் எடுத்து வருதல், முளைப்பாரி எடுத்து வருதல்,ஜமாப் இன்னிசை நிகழ்ச்சி, கோபுர விமான கலசங்கள் நிறுவுதல், அடியார்கள் வழிபாடு, தெய்வத் திருமேனிகளை ஆதாரபீடத்தில் வைத்து எண் வகை மருந்து சாற்றுதல் வியாழக்கிழமை அன்று திருப்பள்ளி எழுச்சி, மங்கள இசை, தெய்வத்திருமேனிக்கு ஆனனந்து ஆட்டி திருக்காப்பு அணுவித்தல், விநாயகர்,கன்னிமார், கருப்புராயன் கோபுரங்கள் தெய்வங்கள் மற்றும் இராஜகாளியம்மனுக்கு திருக்குட நன்னீராட்டு பெருவிழா மகா கும்பாபிஷேகம் பன்னிசை மணி சிவத்திரு. கேங்காதர தேசிகர்,திருமுறை கலாநிதி சிவத்திரு. ஆனந்தசிவம், சிவத்திரு. கணேஷ், சிவத்திரு. ஹரிபிரசாத், சிவத்திரு.தனுஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் மகா கும்பாபிஷேக விழாவை தொடர்ந்து மாபெரும் அன்னதானம் நடைப்பெற்றது.



# தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் மருத்துவ முகாமை துவக்கி வைத்தார் தவெக மாவட்ட செயலாளர் ராஜ பிரகாஷ்

தென்காசி, ஜூன்.21

தமிழ்நாடு முதலமைச்சரும் ,தமிழக வெற்றிக்கழக தலைவருமான ஜோசப் விஜயின் 52 ஆவது பிறந்தநாள் விழா ஜூன் 22ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. அவரது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழக தொண்டர்களும் நிர்வாகிகளும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கோவில்களில் சிறப்பு வழிபாடுகளை நடத்தியும், ஏழை எளிய மக்கள்பயன்பெறும்வகையில்மருத்துவ முகாம்களை நடத்தியும் கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் தென்காசி தமிழக வெற்றி கழகத்தின் மத்திய மாவட்ட கழகம் சார்பில் தென்காசி நடு பேட்டை பள்ளிவாசல் மண்டபத்தில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு தவெக நிர்வாகி ஷமீர் தலைமை தாங்கினார். முகாமினை மத்திய மாவட்ட கழக செயலாளர் ராஜ பிரகாஷ் தொடங்கி வைத்தார். இம்முகாமில் சித்த மருத்துவம், ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், குழந்தைகள் நலம், இருதய நோய், கண் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது. காலைதொடங்கிய முகாம் தென்காசி பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், முதியோர்கள் என பலர்கலந்து கொண்டனர். இம்முகாமில் தமிழக வெற்றி கழக மாவட்ட பொருளாளர் மாரியப்பன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அராபத், ரசாக், கான், மாவட்ட துணை செயலாள் உமா, கிழக்கு நகரச் செயலாளர் சங்கரபாண்டியன், மேற்கு நகர செயலாளர் பஷீர் உட்பட ஒன்றிய நகர நிர்வாகிகள் மருத்துவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஏசியன் கிறிஸ்டியன் பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளி கல்வி துறை சார்பாக உயர்கல்வி வழிகாட்டி விழிப்புணர்வு மற்றும் நேரடி சேர்க்கை சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் சி.தினேஷ்குமார் துவக்கி வைத்து மாணவ மாணவியர்களுக்கு உயர்கல்வி சேர்க்கைகான ஆணைகளை வழங்கினார். உடன் துணைஆட்சியர்பயிற்சிசெல்வி.சௌமியா,முதன்மைகல்விஅலுவலர்இரா.மதன்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# பெண்களுக்கான சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூன்.21

கன்னியாகுமரி மாவட்ட சமூகநலத்துறையின் சார்பில் பெண்குழந்தைகள் பாதுகாப்போம், பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற கருப்பொருளினை மையமாக கொண்டு தோவாளை ஊராட்சி ஒன்றியம் மாதவலாயம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று 20ம் தேதி பிங்க் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இச்சிறப்பு கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு தாய்மார்கள் மற்றும் பெண் குழந்தைகளிடையெ பேசியதாவது:

பெண்களுக்காக மட்டுமே, சிறப்பு கிராம சபை நடத்துவது தமிழ்நாட்டில் தான் என்பது மிகவும் பெருமைக்குரியது. இந்த கிராம சபை ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெறும். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மட்டுமல்லாமல், கல்வி, வேலை வாய்ப்பு என அனைத்து உரிமைகளிலும் பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகத் சமீபத்தில் தமிழ்நாடு அரசு 'சிங்கப்பெண் அதிரடிப்படை' போன்ற சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகள் பிறந்தால் அவர்களின் எதிர்கால உயர்கல்விக்காக செல்வமகள் சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் நிதியுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. அரசியல் சாசனம் பெண்களுக்கு வழங்கியுள்ள சம உரிமை மற்றும் சம வாய்ப்புகளைப் பயன்படுத்தி, பெண் குழந்தைகள் அனைவரும் சமூகத்தின் உன்னத நிலையை அடைய வேண்டும்.

தூய்மைக் காவலர்களிடம் குப்பைகளை வழங்காமல் சாலையோரங்களில் வீசுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், உங்களைச் சுற்றி கொசுக்கள் உற்பத்தி ஆனால், அது உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் தான் பாதிக்கும். எனவே, சுற்றுப்புறத்தைத்தூய்மையாகப் பராமரிக்க பெண்கள் முன்வர வேண்டும். என கூறினார். தொடர்ந்து பெண் குழந்தைகளை காப்போம் பெண்குழந்தைகளை கற்பிப்போம் உறுதிமொழியினை ஏற்று, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்க மரக்கன்றுகள் வழங்கினார்கள். நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் உதவி ஆட்சியர் பயிற்சி மோனிகா, மாவட்ட சமூக நல அலுவலர் விஜயமீனா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் சகிலாபானு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார சுகாதார அலுவலர்கள், குழந்தைகள், பெண்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



### கன்னியாகுமரியில்

# சுற்றுலா தலங்களை மேம்படுத்துவது குறித்து கலெக்டர் கலந்தாய்வு

நாகர்கோவில், ஜூன்.21

கன்னியாகுமரி சுற்றுலா தலத்தினை மேம்படுத்துவது குறித்து, துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப், கலந்தாய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி சுற்றுலா தலமானது உலக முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் உள்ளதோடு, தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இச்சுற்றுலா தளத்தினை மேலும் மேம்படுத்துவது குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் நல்ல சூழ்நிலையில் தங்குவதற்கானவிடுதிகள்மற்றும்விடுதிகள் மற்றும் உணவகங்களில் வெளிநாடு மற்றும் ஒவ்வொரு மாநிலத்தின் உணவு வகைகள் தரமானதாகவும், இவற்றின் விலைகள் ஒரே மாதிரியாக இருப்பதை வருவாய் கோட்டாட்சியர், காவல் துறையினர், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளிட்டவர்கள் கண்காணிக்க வேண்டுமென கேட்டுக்கொள்பட்டது.

இந்துஅறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கடைகளை முறைப்படுத்தி, ஒப்பந்ததை மீறி பல ஆண்டுகளாக கடைகளை நடத்தி வரும் கடை உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுக்க இந்து அறநிலையத்துறை இணை ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் கன்னியாகுமரி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடைகள் வைத்திருக்க அனுமதி பெற்றவர்கள், கடற்கரை சாலையில் இருபுறங்களிலும் கடைகள் வைத்து, சுற்றுலா பயணிகள் செல்வதற்கு நெருக்கடி ஏற்படுத்தும் சாலையோர கடைகளை அப்புறப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவதோடு, தற்போது பயன்பாட்டில் இல்லாத உணவக வளாகத்தினை மேம்படுத்தி, சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் பாதுகாப்பான உணவு வகைகளை விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளபடும் என கூறினார்.

தொடர்ந்து நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உணவு வளாகம், சிறு கடைகள் அமைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் சாலை ஓரங்களில் அனுமதியில்லமால் கடைகள் வைத்திருப்பதையும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறை அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் தமிழ்நாடு சுற்றுலாகழக பொது மேலாளர் லெட்சுமி பிரியா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், இந்து சமய அறநிலையத்துறை இணை இயக்குநர் ஜான்சிராணி, கன்னியாகுமரி துணை காவல் கண்காணிப்பாளர் ஜெயசந்திரன், உள்ளிட்ட துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# திருப்பூர் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது




திருப்பூர் ஜூன்:21

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றைய தினம் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. என்னை திருப்பூர் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கடந்து வாரம் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம். நடத்தப்பட்டு பல்வேறு ஆலோசனைகள் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இனி வரும் நாட்களில் இது போன்றுநலத்திட்டஉதவிகள்தொடர்ந்து வழங்கப்படும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் தேவையான நலத்திட்ட உதவிகள் மற்றும் வசதிகளை செய்து தர அரசு தயாராக உள்ளது. பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை துறை சார்ந்த அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும். நேர்மையான வெளிப்படையான மக்கள் நலம் சார்ந்த அரசு செயல்பட்டு வருகிறது. இவ்வாறு மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறைஅமைச்சர்K.G.அருண்ராஜ் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமை)க.சங்கமித்திரை, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஈஸ்வரன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவ பிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரியில்

# 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி பூமி பூஜை: தவெக எம்எல்ஏக்கள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, ஜூன் 21

கிருஷ்ணகிரியில் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் வளாகத்தில் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடைபெறவுள்ளதையடுத்து அரங்குகள் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா, ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ மருத்துவர் இளையராஜா, கிருஷ்ணகிரி தவெக சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், அதிமுகவை சேர்ந்த பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜன், ஆகியோர் கலந்து கொண்டு பூமி பூஜை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பணிகளை துவக்கி வைத்தனர்.

கிருஷ்ணகிரி நகரில் ஆண்டுதோறும் அகில இந்திய மாங்கனி கண்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஜூலை முதல் வாரத்தில் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் செல்வி கீர்த்தனா மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் வினோத் ஆகியோர் துவக்கி வைக்க உள்ளனர். சுமார் 30 நாட்களாக நடைபெறும் இந்த அகில இந்திய மாங்கனி கண்காட்சியை பார்வையிட தமிழக மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமானோர் வருவார்கள். பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகளுடன் இந்த அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் 'மா' ரகங்களை பார்வையிட சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை லட்சக்கணக்கானோர் இங்கு வருவது வழக்கம். நடைபெற்ற பூமி பூஜை நிகழ்ச்சியில் மைய மாவட்ட செயலாளர் சுரேஷ், கிழக்கு மாவட்ட செயலாளர் முரளி விஜய், மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல், தொழிலதிபர்கோல்டன்சுரேஷ், நிர்வாகிகளான தென்னரசு, வேலவன், மற்றும் நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன், உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# த.வெ.க வில் இணைந்த சமூக சேவையாளர் மின்னல் சீனிவாசன்



கோவை ஜூன் :21

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 மக்கள் தீர்ப்பிற்கு பிறகு அனைத்து கட்சியிலிருந்தும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தவெக வில் இணைந்து வருகின்றனர். அந்த வகையில் அதிமுக முன்னாள் அமைச்சர் உடுமலை ராதாகிருஷ்ணன் தலைமையில் பொள்ளாச்சியில் பல்வேறு ஆலயங்களுக்கு அன்னதானம் வழங்கியும், ஏழை எளிய மாணவர்களுக்கு தொடர்ந்து கல்விக்காக பல்வேறு உதவிகளை செய்தி வரும் பொள்ளாச்சி மின்னல் சீனிவாசன் சென்னை தலைமையகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் அவர்களின் தலைமையில் தன்னை கட்சியில் இணைத்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் செங்கோட்டையின் மற்றும் விக்னேஷ் ஆகியோரிடம் நேரில் சென்று வாழ்த்து பெற்றார். புதிதாக இணைந்த மின்னல் சீனிவாசன் அவர்களுக்கு கட்சி நிர்வாகிகள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

### குளச்சல் அருகே

# வீடு புகுந்து மீனவர் குத்தி கொலை; உறவினர் கைது



குளச்சல், ஜூன்.21

குளச்சல் அருகே கடியப்பட்டணம் பகுதியை சேர்ந்தவர் ராஜன் (51). மீனவர். இவரது மனைவி ஜாஸ்மின் லலிதா (46). இவர்களுக்கு 24 வருடங்கள் முன்பு திருமணம் நடந்தது. 3 பிள்ளைகள் உள்ளனர். இந்த நிலையில் கணவன் மனைவிக்கிடையே தகராறு ஏற்பட்டது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட பிரச்சனையில் ராஜன் தனது மனைவி ஜாஸ்மின் லலிதாவை தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் தனது கணவரிடம் கோபித்து கொண்டு குளச்சல் கொட்டில் பாடு பகுதியில் உள்ள தனது சகோதரி மேரி கலா (53) என்பவரின் வீட்டுக்கு சென்று தங்கி இருந்தார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்பு ராஜன் கொட்டில்பாடு சென்று தனது மனைவியை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கூறி தகராறு செய்துள்ளார். ஆனால் கணவகுடன் செல்ல ஜாஸ்மின் மறுத்து விட்டார். அப்போது மேரி கலாவுக்கும் ராஜனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மேரி கலாவின் கணவர் புஷ்பநாதன் இருவரையும் சமாதானம் செய்து ராஜனுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்துள்ளார்.

இதனால் புஷ்பநாதன் மீது ராஜன் ஆத்திரமடைந்தார். தனது மனைவி தன்னுடன் வர மறுப்பதற்கு புஷ்பநாதனும் அவரது மனைவியும் தான் காரணம் என எண்ணினார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை ஜாஸ்மின் லலிதா வெளியூரில் நர்சிங் படிக்கும் தனது மகளை அழைத்து வருவதற்காக நாகர்கோவில் பஸ் நிலையம் சென்று இருந்தார். அவருடன் மேரி கலாவும் சென்றிருந்தார். புஷ்பநாதன் மட்டும் தனியாக வீட்டில் இருந்துள்ளார்.

அந்த நேரத்தில் ராஜன் அங்கு சென்று தனது மனைவி எங்கே என புஷ்பநாதனிடம் கேட்டுள்ளார். அப்போது அவர் மகளை அழைத்து வருவதற்காக சென்று உள்ளார் என தெரிவித்தார். இதில் மாறி மாறி இருவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. திடீரென ஆத்திரமடைந்த ராஜன் எல்லா பிரச்சனைக்கும் நீதான் காரணம் எனக் கூறி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் புஷ்பநாதனை இடது பக்க கழுத்து மற்றும் மார்பு பகுதியில் குத்தினார். இதில் ரத்த வெள்ளத்தில் புஷ்பநாதன் சரிந்தார்.

இந்த சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். அப்போது ராஜன் தப்பி ஓட்டம் பிடித்தார். படுங்காயம் அடைந்த புஷ்பநாதனை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக குளச்சல் அரசு மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் புஷ்பநாதன் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்ததும் குளச்சல் போலீசார் விசாரணை நடத்தி புஷ்பநாதன் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து மேரி கலா அளித்த புகாரின் பேரில் ராஜன் மீது வழக்கு பதிவு செய்தனர். நேற்று காலை ராஜன் கைது செய்யப்பட்டார். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.



# நட்டாலம் அரசு பள்ளி மாணவ மாணவியர் ஏற்படுத்திய விழிப்புணர்வு

மார்த்தாண்டம், ஜூன். 21

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்படி, தக்கலை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பார்த்திபன் மேற்பார்வையில் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவு உதவி ஆய்வாளர் சிதம்பர தாணு தலைமையிலான போக்குவரத்து போலீசார் மற்றும் சாலை பாதுகாப்பு கிளப் மாணவ, மாணவியர்களுடன் இணைந்து பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நட்டாலம் அரசு பள்ளி முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்து விதிகளை முறையாக பின்பற்றுவதன் அவசியம், தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதின் முக்கியத்துவம், அதிக வேகத்தில் வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்துகள், மது அருந்தி வாகனம் இயக்குவதால் ஏற்படும் விபத்துகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சாலை விதிகளை மதித்து செயல்பட்டால் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை பெருமளவில் தடுக்க முடியும் என்பதையும் மாணவர்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர். இளம் தலைமுறையினரிடையே போக்குவரத்து ஒழுங்கு மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை அமைந்தது.

மாணவர்கள் நேரடியாக சமூக விழிப்புணர்வு பணிகளில் பங்கேற்பது, எதிர்காலத்தில் போக்குவரத்து விதிகளை மதிக்கும் பொறுப்பான சமுதாயத்தை உருவாக்குவதற்கானமுக்கியமானமுன்னெடுப்பாகும். காவல்துறை மற்றும் மாணவர்கள் இணைந்து மேற்கொண்ட இந்த நிகழ்ச்சியை பொதுமக்கள் பாராட்டினர்.

## தஞ்சாவூரில்
# ஓவியம் சிற்பக் கலை கண்காட்சிக்கு படைப்புகளை அனுப்பலாம்




தஞ்சாவூர் ஜூன் 21

தஞ்சாவூரில் ஓவியம் சிற்பக்கலை கண்காட்சி நடைபெற உள்ளதால் படைப்புகளை அனுப்ப அடுத்து மாதம் ஜூலை 15 ந்தேதி கடைசி நாளாகும் தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது :

தமிழக அரசின் கலை பண் பாட்டுத்துறை சார்பில் ஓவியம், சிற்பக்கலையை வளர்த்திடும் நோக்கத்திலும், அக்கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்கு விக்கும் நோக்கத்திலும், ஓவியம் மற்றும் சிற்பக் கலைகண்காட்சி யை தஞ்சாவூர் மண்டல அலுவலகத்தில் நடத்த திட்டமிட்டு செயல் படுத்தி வருகிறது. ஓவியம் மற்றும் சிற்பக்கலை கண்காட்சிக்கு கலைஞர்கள் தங்களது மரபு வழி நவீன பாணி ஓவியங்கள், தஞ்சை ஓவியங்கள், அனைத்து வகையான சிற்ப படைப்புகளையும் வழங்க வேண்டும். அனைத்து ஓவியம் மற்றும் சிற்பக்கலை படைப்புகளும் கண்காட்சியில் காட்ட காட்சிப்படுத் தப்படும் .அக்கலை படைப்புகள் அனைத்தும் மண்டல கலை பண் பாட்டுத்துறை மைய உதவி இயக்கு னர் அளவில் ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டு தேர்வு செய்யப் படும் .அதில் முதல் பரிசாக 7 கலை ஞர்களுக்கு தலா ரூபாய் 5000, 2ம் பரிசாக 7 கலைஞர் களுக்கு ரூபாய் 3000 ,3ஆம் பரிசாக7 கலைஞர்களு க்கு தலா ரூபாய் 2000ம், சான்றிதழு ம் வழங்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஓவியம், சிற்பக் கலைஞர்கள் தங்களை படைப்புகளை தன் விவர குறிப்புடன் படைப்புகளின் எண் ணிக்கை விவரங்களுடன் தஞ்சாவூர் பிள்ளையார்பட்டி மண்டல கயிறு வாரியம் அருகில் உள்ள மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குனர் அலுவலகத்திற் கு அடுத்த மாதம் ஜூலை 15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண் டும் மேற்கண்டவாறு அதில் கூறப்ப ட்டுள்ளது

## குலசேகரத்தில்
# ஓட்டல் ஊழியரை துப்பாக்கி காட்டி மிரட்டிய போதை ஆசாமி: போலீசார் கைது செய்தனர்

மார்த்தாண்டம், ஜூன். 21

குலசேகரம் பகுதியில் பிரபல ஓட்டல் ஒன்று உள்ளது. இந்த ஓட்டலில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு பேச்சிப்பாறை பகுதியை சேர்ந்த ஒருவர் சாப்பிட வந்தார்.

அப்போது அவர் போதையில் இருந்ததாக கூறப்படுகிறது. ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது இருக்கையில் இருந்து சரிந்து விழச் சென்றுள்ளார். இதை பார்த்த ஹோட்டல் ஊழியர் ஒருவர் ஓடி சென்று அவரை தாங்கிப் பிடித்தார்.


அப்போது அந்த நபர் தன்னை பிடிக்க பிடித்த ஊழியரை தகாத வார்த்தைகளால் திட்டி உள்ளார். இதனால் ஓட்டல் ஊழியருக்கும் போதை ஆசாமிக்கும் தகராறு ஏற்பட்டது. அங்கு இருந்தவர்கள் ஓட்டல் ஊழியரை சமாதானம் செய்து, போதை ஆசாமியை அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் அதே போதை நபர் நேற்று முன்தினம் இரவு தனது மனைவி மற்றும் குடும்பத்தாருடன் இரவு 10:30 மணி அளவில் அதே ஓட்டலுக்கு காரில் வந்துள்ளார். அப்போதும் போதையில் இருந்த அவர் காரை ஓட்டல் முன்பு நிறுத்திவிட்டு வேகமாக ஓட்டலுக்குள் சென்று தன்னிடம் ஏற்கனவே தகராறு செய்த ஓட்டல் ஊழியரை தேடினார். அங்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தவரை திடீரென சென்று போதை ஆசாமி தாக்கியுள்ளார். பின்னர் திடீரென காரில் சென்று துப்பாக்கியை (ஏர் கன்) எடுத்து வந்தார். இதை பார்த்ததும் ஓட்டல் இருந்த பொதுமக்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக பொதுமக்கள் மற்றும் அந்த போதை ஆசாமியின் மனைவி, உறவினர்கள் சேர்ந்து துப்பாக்கியை பறிக்க முயன்றனர். ஆனால் போதை நபர் துப்பாக்கியை விடாமல் சுட்டு விடுவேன் என மிரட்டினார். பின்னர் போராடி துப்பாக்கியை பறித்து சம்பந்தப்பட்ட போதை நபரை காரில் ஏற்றி அனுப்ப முயன்றனர்.

இதற்கு இடையில் இதை குறித்து அறிந்த குலசேகரம் போலீசார் உடனடியாக சம்பவ இடம் வந்து போதை ஆசாமியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அவரிடம் இருந்த துப்பாக்கியும் பறிமுதல் செய்தனர். இரவு முழுவதும் போலீசாரிடமும் அந்த போதை நபர் தகராறு செய்ததாக கூறப்படுகிறது. போலீசார் கூறுகையில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி சாதாரண ஏர் கன் வகையை சேர்ந்ததாகும் என்றனர். மேலும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.


## மணப்பாறை அருகே
# வீடுகளுக்குள் புகுந்த மழை நீர்



திருச்சி, ஜூன் 21

திருச்சிமாவட்டம்மணப்பாறைஅருகேவையம்பட்டி சுற்றுவட்டாரப் பகுதியில் நேற்று இரவு பெய்த பலத்த மழையால் தவளவீரம்பட்டி பகுதியில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது.

இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். வாளிகளைக் கொண்டு தண்ணீரை வெளியேற்றும் நிலை ஏற்பட்டது. இப்பகுதியில் முறையான வடிகால் வசதி இல்லாததே மழைநீர் வீடுகளுக்குள் புகுந்ததற்குக் காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



# தஞ்சாவூர் மாநகராட்சி குப்பை கிடங்கில் முறைகேடு
### லஞ்ச ஒழிப்பு போலீசார் முன்னிலையில் தொழில்நுட்பக் குழுவினர் அளவீடு

தஞ்சாவூர் ஜூன் 21

தஞ்சாவூர் மாநகராட்சி குப்பை கிடங்கில் ஏற்பட்ட முறை கேடு தொட ர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் முன்னிலையில் குப்பை கள் எவ்வளவு உள்ளது என்பது குறித்து அண்ணா பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப குழுவி னர் அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டனர்

தஞ்சாவூர் ஜெபமாலை புரத்தில் 28 ஏக்கர் பரப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு உள்ளது .மாநகரில் சேகரிக்கப்படும் குப்பைகள் இந்த கிடங்கிற்கு தான் கொண்டு செல்லப்படும் .இங்கு சேரும் குப்பைகளை தரம் பிரிக்க கடந்த 2018 ஆண்டு பயோ மைனிக் முறையில் 2.30 லட்சம் கன மீட்டர் அளவுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட து

இதற்காக ஒப்பந்தம் எடுத்த தனி யார் நிறுவனம் 40,115யூனிட் மின்சா ரத்தை பயன்படுத்தி ,73,253 கன மீட்டர் குப்பையை அகற்றி உள்ளது. அதன் பின் புதிய நிறுவனத்திற்கு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1.56 லட்சம் கன மீட்டர் ரூபாய் 9.57 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது

ஆனால் புதிதாக ஒப்பந்தம் எடுத் த நிறுவனம் வெறும் 5000 கன மீட்டர் குப்பையை மட்டுமே அகற்றி விட்டு ரூபாய் 9. 57 கோடிய பில் தொகையை எடுத்துக் கொண்டு ள்ளது .அதற்கு 8,328 யூனிட் மின்சா ரத்தை பயன்படுத்தி உள்ளனர். இதில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளதாக லஞ்ச ஒழிப்பு போலீஸார் விசாரிக்க வேண்டும் என மதுரை ஐகோர்ட்டில் தஞ்சை யை சேர்ந்த சமூக ஆர்வலர் கோவிந்தராஜ் என்பவர் மனு தாக்கல் செய்தார்

இந்த வழக்கு மதுரை ஐகோர்ட்டி ல் நடைபெற்று வந்த நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத் தில் இருந்து குப்பை கிடங்கு மற்று ம் ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் குறித்த ஆவணங்கள் ஆய்வு செய் து தேவையான ஆவணங்களை எடுத்துச் சென்றனர்

மேலும் கடந்த ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி தஞ்சாவூர் மாநகராட்சி யின் முன்னாள் ஆணையர், ஓய்வு பெற்ற செயற்பொறியாளர் பணி யிட மாறுதல் செய்யப்பட்டுள்ள உதவி பொறியாளர், ஒப்பந்தக்கா ரர் ஆகிய4பேரும் தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்

இந்த நிலையில் தஞ்சாவூரில் லஞ்ச ஒழிப்புத்துறை துணை போலீஸ் சூப்பர்ண்டு அன்பரசன் தலைமையிலான போலீஸார் முன்னிலையில் சென்னை அண்ணாபல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப குழுவினர் காலை முதல் மாலை வரை குப்பை கிடங்கி ல் உள்ள குப்பைகள் இருப்பு குறித் து ரோவர் உள்ளிட்ட நவீன கருவி கள் மூலம் அளவீடு செய்தனர். தொடர்ந்து, இந்த அளவிடும் பணி நடை பெற உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# பசுமை ஆர்வலர்களுக்கு கிரீன் காடெசஸ் கிரீன் அவார்ட்ஸ் 2026




சென்னை, ஜூன்21,

சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் கிரீன் காடெசஸ், 2026 ஆம் ஆண்டிற்கான கிரீன் காடெசஸ் கிரீன் அவார்ட்ஸ் விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலைத்தன்மை, சமூக நலன் மற்றும் சமூக மேம்பாட்டிற்காக சிறப்பான பங்களிப்பை வழங்கி வரும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை கௌரவிக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த விழாவில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சமூகத் தொழில்முனைவோர், நலவாழ்வு ஆதரவாளர்கள், தொழில் துறை தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிரீன் காடெசஸ் நினா ரெட்டி, அஞ்சு அகர்வால், ப்ரீத்தி தியாகராஜன், ஜெயஸ்ரீ விவேக் மற்றும் மஞ்சு முதித் ஆகியோரால் நிறுவப்பட்ட கிரீன் காடெசஸ் அமைப்பு , சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பொறுப்பான வாழ்க்கை முறை, சமூகப் பொறுப்பு மற்றும் அர்த்தமுள்ள சமூக மாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. அதன் பல்வேறு முயற்சிகள் மூலம் தனிநபர்களும் நிறுவனங்களும் நிலைத்தன்மை சார்ந்த நடைமுறைகளைப் பின்பற்றி சமூகத்திற்கு நேர்மறையான பங்களிப்பை வழங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக, சுற்றுச்சூழல் ஆர்வலரும் முன்னாள் ஐக்கிய நாடுகள் சபையின் இந்தியா யுவாஹ் *(YuWaah)* தூதரான சௌம்ய ரஞ்சன் பிஸ்வால் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கருத்துகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் ஷெஃபாலி தாதாபாய் – சன்ஷைன் சன்ஃப்ளவர் விருதும், ஜஸ்வந்த் சிங் – கிரீன் சாங்க்சுவரி விருதும் கிருஷ்ண குமார் சுரேஷ் – ரெஸ்டோரேஷன் எக்ஸலன்ஸ் விருதும் , மம்தா ஜெயின் – த்ரெட்ஸ் ஆஃப் சேஞ்ச் விருதும், ஜனனி வெங்கிடேஷ் ரோகா – கிரீன் வாரியர் விருதும், கல்பனா மணிவண்ணன் – சாயில் டு சக்சஸ் விருதும், ஹனு ரெட்டி ரியால்டி இந்தியா பிரைவேட் லிமிடெட் – லெஜண்டரி விருதும், கல்யாணி பிரமோத் – கிரீன் ஆர்டிஸ்ட் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



## பருவதராஜா குல மீனவர் சமுக நல அறக்கட்டளை சார்பில்
# அரசு மற்றும் தனியார் பள்ளியில் 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்த மாணவ, மாணவிகளுக்கு நற்சாற்றிதழ்களுடன் ஊக்கப் பரிசுகள்

கிருஷ்ணகிரி, ஜூன் 21

கிருஷ்ணகிரி பழையபேட்டையில் பருவத ராஜகுல மீனவர் சமூக நல அறக்கட்டளை மற்றும் மீன் வியாபாரிகளின் நல சங்கத்தின் சார்பில் 6ம் விழா என முப்பெரும் விழா நடைபெற்றது

அங்காளம்மன் திருக்கோயில் சன்னதியில் நடைபெற்ற இந்த விழாவிற்கு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த முப்பெரும் விழாவிற்கு ம இளங்கோ, குமாரவடிவேல், ஸ்ரீரங்கன், ஜெயக்குமார், முனுசாமி, ராஜாகணேசன், கோவிந்தராஜ், செந்தில்குமார், ஜெகநாதன், நாகராஜ் ,ரமேஷ் ஆகியோர் முன்னிலை வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள்

மேலும் இந்த விழாவிற்கு அறக்கட்டளையின் வளர்ச்சி செயலாளர் வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகள் கைகளில் செல்போன்களை எடுப்பதை விட புத்தகங்களை கையில் எடுத்தால் வெற்றி பெறுவது மட்டுமின்றி வாழ்வில் மிக உயர்ந்த இடத்திற்கு செல்ல முடியும் ஆகையால் பெற்றோர்களின் கனவுகளை நினைவாக்கும் வகையில் நீங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தி வாழ்வு முன்னோர்வதோடு நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை சேர்ப்பதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்,

இதனை தொடர்ந்து நடந்து முடிந்த பற்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் அரசு பொது தேர்வுகளில் முதல் மூன்று மட்டுமன்றி பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் எடுத்த மாணவ மாணவிகளை பாராட்டி அவர்களை ஊக்குவிக்குவிக்கும் விதமாக நற்சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் ஊக்க தொகை வழங்கி கௌரவித்தார். மேலும் இந்த விழாவில் சங்கர், விஜயலட்சுமி, ஸ்ரீ கணேஷ், ஆதித்யா, பாலகிருஷ்ணன், மெதிலேஷ்,மீனாட்சி மனசீனிவாசன் ஆறுமுகம், அகமித்திரா மற்றும் சீனிவாசன் பாலமுருகன் ஸ்ரீரங்கன், கோவில் பூசாரி கோவிந்தராஜ், சொக்கலிங்கம் உள்ளிட்ட ஏராளமானவர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

# ஜோசப் விஜய் ஆட்சியா? பேஸ்... பேஸ்... நல்லாவே நடக்குது..
### சூளுரைக்கும் அகில இந்திய தமிழர் கழகம் முத்துக்குமார்



நாகர்கோவில்: ஜூன் 21

தமிழகத்தில் புதிய முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜயின் ஆட்சி ஒரு மாதத்தை கடந்துள்ளது. தவெக ஆட்சி எப்படி இருக்கிறது என்று அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமாரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது :

சினிமாவில் மாஸாக இருந்து வந்த ஜோசப் விஜய் மிக குறுகிய காலத்திற்குள்ளேயே ஆட்சியை கைப்பற்றியுள்ளார். முன் கூட்டி அறிவித்தது போலவே கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்று பங்களித்து வரலாற்று சாதனையும் படைத்துள்ளார்.

ஜோசப் விஜய் ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் தான் முடிந்துள்ளது. அதற்குள் முதல் சட்டமன்றத் தொடரிலேயே மேகதாது அணை கட்டு விவகாரத்தில் எதிர்ப்பு தெரிவித்து ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி சட்டப்பேரவையில் அனைத்து கட்சி ஆதரவையும் பெற்றுள்ளது வரவேற்க தக்கது.

எங்கும் புதுமை, எதிலும் புதுமை காணும் தவெக ஆட்சி திராவிட கட்சிகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுத்துள்ளது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதுவும் அம்மா கட்சி பழுது பார்க்கும் நிலையில் உள்ளது. வீர முழக்கமிடும் கறுப்பு துண்டு காரர் ஊழலுக்கு எதிரான கட்சி என்று சொல்லி தவெகவுடன் நட்புறவு கொண்டாடுகிறார். சிவப்பு துண்டு காரரோ தவெக வின் கொள்கை பரப்பு செயலாளர் போன்று பேசி வருகிறார். காங்கிரஸ் காரர்களோ, ஆட்சியில் பங்கு என்கிற போர்வையில் தவெகவுடன் கரைந்தே போய் விட்டார்கள்.

பெரியாரையும் விட்டு வைக்கவில்லை. அம்பேத்கரையும் மறக்கவில்லை என்று ஆட்சியை தூக்கி பிடிக்கிறார்கள். கல்வி கூடங்கள் தொடங்குவதில் தாராளம், அம்மா உணவகங்கள் புதுப்பித்தல், டாஸ்மாக் கடைகள் அகற்றம், அறநிலைதுறையில் களை எடுப்பு என்று விசித்திர சகாப்தத்தை நிகழ்த்தியுள்ளது தவெக அரசு. வெள்ளை மனசு என்பது போல் வெள்ளை அறிக்கை, இப்போது மேகதாது அணை கட்டு பிரச்சனை, இதுவெல்லாம் 40 நாட்களுக்குள் நடத்தப் பட்ட தவெக அரசின் செயல்பாடுகள் என்று சொல்லலாம். வரைக்கும் தனக்காக ரசிகர்களை வசிகரம் செய்தவர், இன்று தவெக ஆட்சி மூலம் தமிழக மக்களையே கபளிகரம் செய்து கொண்டிருக்கிறார் என்பது தான் நிதர்சனமான உண்மை.

தவெக ஆட்சிக்கு வந்த ஒரு மாதக் காலத்திலேயே ஜோசப் விஜய் ஆட்சியா? பேஸ்.. பேஸ்.. நல்லாயிருக்கிறது.. என்கிற வகையில் தான் மக்களிடம் நல்ல வரவேற்பு குரல் ஒலிக்க தொடங்கியுள்ளது. இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய மாணவியர் வரவேற்பு விழா



சென்னை, ஜூன்21

சென்னை ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், முதலாம் ஆண்டு புதிய மாணவியர் வரவேற்பு விழா நடைபெற்றது. கல்லூரியில் புதிதாகச் சேர்ந்த மாணவியரை வரவேற்பதற்கும், கல்லூரிச் சூழலை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

புதிய மாணவியர், அவர்களது மூத்த மாணவியரால் நடன நிகழ்ச்சியுடன் மலர் தூவல், வாழ்த்து அட்டைகள் மற்றும் பூங்கொத்துகள் வழங்கி அன்புடன் வரவேற்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி, மூத்த மாணவியர் மற்றும் புதிய மாணவியர்களின் கலந்துரையாடலுக்கான ஒரு வாய்ப்பை வழங்கியதுடன், மாணவியர் தங்கள் கல்விப் பயணத்தை நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் தொடங்க உதவியது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.